தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
பிப்ரவரி 23, 2015
இதழுடன் இணைப்பு

கூகுள் டாக் இனி இயங்காது

பேஸ்புக் அக்கவுண்ட்டிற்கு வாரிசு

இன்டர்நெட் டாட் ஓ.ஆர்.ஜி. எதற்காக?

ஐபோன், ஐபேடில் விரைவாக தட்டச்சு

–டாக்டர் பெ.சந்திர போஸ்–

மற்ற டிஜிட்டல் சாதனங்களுடன் ஒப்பிடுகையில், ஐபோன் மற்றும் ஐபேட் ஆகியவற்றின் விலை சற்று அதிகமே. இதுவே இதன் வாடிக்கையாளர் எண்ணிக்கையைக் குறைவாகவே இந்தியாவில் வைத்துள்ளது. இருப்பினும் பல காரணங்களுக்காக, இவற்றைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை தற்போது உயர்ந்து வருகிறது. இவை தரும் தொழில் நுட்ப வசதிகள், பாதுகாப்பான கட்டமைப்பு ஆகியவற்றை முதன்மை காரணங்களாகக் கூறலாம். இந்த சாதனங்களில் தட்டச்சு செய்திட இதில் தரப்பட்டுள்ள திரை கீ போர்ட் வேகத்தையும் எளிமையையும் தருகிறது. இதில் இன்னும் சில குறுக்கு வழிகள் கிடைக்கின்றன. அவற்றையும் அறிந்து கொண்டால், இதில்

உள்ளே

பேஸ்புக் அக்கவுண்ட்டிற்கு வாரிசு	பக்கம் 5
கூகுள் டாக் இனி இயங்காது	பக்கம் 10
இன்டர்நெட் டாட் ஓ.ஆர்.ஜி. எதற்காக?	பக்கம் 12

வாசகர்களே....

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துகளை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளைக் குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல் 'சிடி'க்கள் குறித்து மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

நூல்கள் மற்றும் 'சிடி'க்கள் 2014 ஆகஸ்ட் மாதத்திற்கு முன் வெளியாகியிருக்கக்கூடாது. நூல்கள் மற்றும் 'சிடி'க்களை உருவாக்கியவர், வெளியிட்டவர், கிடைக்கும் இடங்கள், விலை ஆகியவற்றைக் கட்டாயம் குறிப்பிடவேண்டும்.

தினமலர் – கம்ப்யூட்டர் மலர், 39, ஒயிட்ஸ் ரோடு, இராயப் பேட்டை, சென்னை – 600 014
computermalar@dinamalar.in

தட்டச்சு செய்வது இன்னும் வேகமாக இருக்கும். அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

1. புள்ளி வைக்க: கிடைக்கும் கீ போர்டில் ஸ்பேஸ் பாரினை இருமுறை தட்டினால், முற்றுப் புள்ளி கிடைக்கும். அது மட்டுமின்றி, முற்றுப் புள்ளியை அடுத்து ஒரு ஸ்பேஸ் விடப்பட்டிருக்கும். இதனால், அடுத்த வாக்கியத்தை நீங்கள் உடனே தட்டச்சு செய்திடலாம்.

2..com, .net, .org வேகமாக டைப் செய்திட: இணைய முகவரிகளை டைப் செய்திடுகையில், .com, .net, .org போன்றவற்றை அமைத்திட, விரலை அதற்கான கீ அருகே கொண்டு செல்லவும். பின் அதனைச் சற்று உயர்த்தினால், குறிப்பிட்ட துணை முகவரி அமைக்கப்படும். மற்ற புரோகிராம்களில் இது ஏற்படுகிறதோ இல்லையோ, சபாரி பிரவுசரில் இது நிச்சயம் ஏற்படும்.

3. எண், அடையாளக் குறியீடு, கேபிடல் எழுத்து: ஒரே ஒரு டேப் செய்வதன் மூலம் எண், சிம்பல் எனப்படும் அடையாளக் குறியீடு மற்றும் ஆங்கிலப் பெரிய எழுத்து ஆகியவற்றை அமைக்கலாம். பெரும்பாலானவர்கள் இவற்றை அமைக்க, கீ போர்டில் 123 பட்டன் அழுத்தி, பின்னர் நமக்குத் தேவையான எண் அல்லது குறியீட்டினை அமைப்பார்கள். பின், மீண்டும் எழுத்துக்கான பட்டன் அழுத்தி, முந்தைய கீ போர்டுக்கு வருவார்கள். இதற்கு இன்னொரு வேகமான வழி உள்ளது. 123 கீயை அழுத்தவும். பின்னர், திரையில் அழுத்தியவாறே இருக்கவும். விரலை எடுக்காமலேயே, உங்களுக்குத் தேவைப்படும் எண் அல்லது குறியீட்டிற்கான கீயை அழுத்திப் பின்னர் விரலை எடுக்கவும். மீண்டும் எழுத்துக்கான கீ போர்ட் அமைக்கும் வேலை குறையும். இந்த ட்ரிக் ஷிப்ட் கீக்கும் பொருந்தும். ஆங்கில பெரிய எழுத்து அமைக்க வேண்டி, ஷிப்ட் கீயை அழுத்தி, பின் குறிப்பிட்ட கீயை அழுத்திப் பின் மீண்டும் திரும்புவதற்குப் பதிலாக, ஷிப்ட் கீயை அழுத்தியவாறே, பெரிய எழுத்திற்கான கீயை அழுத்திப் பின், ஷிப்ட் கீயில் உள்ள விரலை எடுத்துவிட்டால், முதலில் இருந்த கீ போர்ட் கிடைக்கும்.

4. கீ போர்டை இரண்டாகப் பிரித்து: ஆப்பிள் சாதனங்களில், அதில் தரப்படும் திரை கீ போர்டினை இரண்டாகப் பிரித்து வைத்து இயக்கலாம். இதனால், நம் கட்டைவிரலை வைத்துக் கொண்டு டைப் செய்திடலாம். திரையில் காட்டப்படும் கீ போர்டை, நடுவில் விரலை வைத்து இழுத்தால், இரண்டாகப் பிரித்துக் காட்டப்படும். இந்த நிலையில், நீங்கள் ஒற்றை விரலால் டைப் செய்திடலாம். இதனை மீண்டும் ஒரே கீ போர்டாக அமைக்க வேண்டும் என்றால், ஒவ்வொரு கீ போர்டின் முனைகளில், ஒரு விரலை வைத்து, ஒன்றுடன் ஒன்று எதிராக இழுத்தால், கீ போர்ட் மீண்டும் ஒரே கீ போர்டாக மாறும். பிரித்த கீ போர்டுகளில் ஒரு சலுகையும் தரப்பட்டுள்ளது. T எழுத்துக்கான கீ யின் வலது புறம் உள்ள காலியான இடத்தில் தட்டுங்கள். Y கிடைக்கும். Y எழுத்திற்கு இடது பக்கம் உள்ள காலியான இடத்தில் தட்டுங்கள். T எழுத்து கிடைக்கும்.

5. கீ போர்டைச் சுற்றி அமைக்க: திரையில் கிடைக்கும் கீ போர்டினை, இழுத்து எந்த பக்கமாகவும் வைத்துக் கொண்டு செயல்படலாம். இதனால், கீ போர்டுக்குக் கீழாக என்ன உள்ளது என்று பார்க்கலாம். கீ போர்டின் வலது கீழ் மூலையில் உள்ள பட்டனைத் தொடவும். தொட்டவாறே



விரலை எங்கு கீ போர்ட் அமைக்கப்பட வேண்டும் என எண்ணுகிறீர்களோ, அந்த இடத்தினை நோக்கி, மேலாகவோ கீழாகவோ இழுக்கவும். மேலும், இந்த குறியீட்டில் தொடர்ந்து அழுத்தி, கீ போர்டை நகர்த்த, நகர்த்தாமல் வைத்திட, இணைக்க, இரண்டாகப் பிரிக்கத் தேவையான ஆப்ஷன்களைப் பெறலாம். இந்த செயல்பாட்டினை, கீ போர்ட் பிரிக்கப்பட்டிருந்தாலும், முழுதாக இருந்தாலும் மேற்கொள்ளலாம்.

6.குறியீடு கீயில் மற்ற குறியீடுகள்: திரையில் காட்டப்படும் கீ போர்டில், சிறப்புக் குறியீடுகள் தேவை எனில், அதற்கான கீ போர்ட் தோற்றத்தினைப் பெற்று, கீ அழுத்தி அமைக்கிறோம். இருப்பினும், இதிலும் காட்டப்படாத சில குறியீடுகள், இந்த கீ போர்டில் உள்ளன. அவற்றைப் பெறும் வழிகள் தான் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, அமெரிக்க டாலர் குறியீடு எப்படி டைப் செய்வது என்பதைக் கீ போர்டில் தெரியும். அதன் நூற்றில் ஒரு பங்கான செண்ட் குறியீடு (¢) எங்கே உள்ளது கீ போர்டில் டாலர் டைப் செய்வதற்கான கீயைத் தொடர்ந்து அழுத்துங்கள். டாலருடன் சேர்ந்த மற்ற குறியீடுகளும் கிடைக்கும். எது வேண்டுமோ அதனைத் தொட்டு அமைத்துக் கொள்ளலாம். இதே போல பல குறியீடுகளைச் சேர்ந்த மற்ற குறியீடுகளை, அந்த அந்த கீகளை அழுத்துவதன் மூலம் பெறலாம்.

7.பெரிய எழுத்து மாற்றம்; ஆங்கில வாக்கியங்களில், பெரிய எழுத்துகளைத் தொடர்ந்து அமைப்பதற்கான கேப்ஸ் லாக் கீ பயன்பாடு சற்று சிரமம் தரும் வேலையாகத்தான் இருக்கும். தொடர்ந்து பல எழுத்துகள் இல்லாமல், ஒரு சில எழுத்துகளை மட்டும் பெரிய எழுத்துகளாக அமைக்க வேண்டும் எனில், கேப்ஸ் லாக் கீயை அழுத்த வேண்டியதில்லை. ஷிப்ட் கீயை இருமுறை தட்டினால் போதும். பெரிய எழுத்து தரும் வகையில் கீ போர்ட் மாறும். பின் மீண்டும் ஷிப்ட் கீயை அழுத்தும் வரை அப்படியே இருக்கும். கேப்ஸ் லாக் கீ அழுத்தி கிடைக்கும் சிரமங்களைத் தவிர்க்கலாம்.

8.அசைத்தால், மீண்டும் கிடைக்கும்: நீங்கள் டெக்ஸ்ட் டைப் செய்திருந்தாலும், பேஸ்ட் செய்திருந்தாலும், கட் செய்திருந்தாலும், அதனை மீண்டும் பெற "Undo" ஆப்ஷன் எல்லாம் செல்ல வேண்டியதில்லை. ஐபோன் அல்லது ஐபேடைச் சற்று அசைத்தால் போதும். இந்த ஆப்ஷன் கீ போர்டில் காட்டப்படவில்லை.

9.குயிக் டைப் கீ போர்ட்: ஆப்பிள் நிறுவனம் தான் கொண்டு வந்த ஐ.ஓ.எஸ்.8 ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில், சொற்களை முன் கூட்டியே தந்திடும் வசதியைத் தந்தது. இதற்கு குயிக் டைப் ("QuickType") கீ போர்ட் என்று பெயர். நீங்கள் ஒரு சொல்லை டைப் செய்திடுகையில், அந்த சொல் என்னவாக இருக்கும் என்று காட்டும். எடுத்துக் காட்டாக, "ambas," என டைப் செய்திடுகையில், கீ போர்டில் "ambassador," என்று காட்டப்படும். அது வேண்டும் என்றால், அதில் டேப் செய்தால் போதும். அது மட்டுமின்றி, நீங்கள் டைப் செய்த சொற்களை அறிந்து, அடுத்த சொல் என்னவென்றும் காட்டும். எடுத்துக் காட்டாக "HI, how are," என டைப் செய்தால், அடுத்த சொல்லாக "you." என்று காட்டும். இந்த சொற்களைக் காட்டும் குயிக் டைப் பார் உங்களுக்கு வேண்டாம் என நீங்கள் எண்ணினால், கீ போர்டுக்கு மேலாக உள்ள சிறிய பாரினைத் தொட்டு இழுத்து விட்டுவிட்டால் போதும்.

10.டெக்ஸ்ட் விரிவு படுத்தும் ஷார்ட் கட் கீகள்: பெரிய அளவிலான டெக்ஸ்ட்டை மீண்டும் மீண்டும் டைப் செய்திடத் தேவை எனில், அதற்கு ஷார்ட் கட் கீ ஒன்றை அமைத்து, அவற்றை மட்டும் அழுத்தினால் போதும். எடுத்துக் காட்டாக, உங்கள் மின் அஞ்சல் முகவரியினை பிழையில்லாமல் மற்றவர்களுக்குத் தெரிவிக்கவே விரும்புவீர்கள். ஒவ்வொரு முறையும் டைப் செய்தால், ஏதேனும் ஒரு பிழை ஏற்படலாம். இதனைத் தவிர்க்க, @@ என்ற கீகளை அழுத்தினால், உங்கள் மின் அஞ்சல் முகவரி தானாக டைப் செய்திடும் வகையில் அமைக்கலாம். இந்த ஷார்ட் கட் கீகளைக் கொண்டு, இன்னும் பல விந்தைகளை மேற்கொள்ளலாம். ஓரிரு எழுத்துக்கள், ஒரு பத்தியையே கொண்டு வரும் வகையில் அமைக்கலாம்.

மேலே தரப்பட்ட டிப்ஸ் தவிர இன்னும் சில பயனுள்ள குறிப்புகளும் உங்களுக்குக் கிடைக்கலாம். ஆனால், இவை எல்லாம் தேவை இல்லை; என்னால், வேகமாக டைப் செய்திட முடியும். ஆனால், திரையில் அல்லவோ கீ போர்ட் இருக்கிறது என்று கவலைப்பட்டால், தற்போது நிறைய புளூடூத் கீ போர்ட்கள் கிடைக்கின்றன. அவற்றை உங்கள் ஐபேட் அல்லது ஐபோனுடன் இணைத்து செயல்படுத்தலாம்.



பேஸ்புக் அக்கவுண்ட்டிற்கு வாரிசு

சமூக இணைய தளமாகிய பேஸ்புக், அண்மையில், 'Legacy Contact' என்னும் டூல் ஒன்றைப் புதியதாக அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம், இத்தளத்தில் அக்கவுண்ட் வைத்துள்ள ஒருவர் இறந்தால், அவருடைய அக்கவுண்ட்டினை, அவரின் பக்கத்தினை நிர்வகிக்க ஒருவரை நியமிக்கும் வசதி தரப்பட்டுள்ளது.

நாமே நமக்கான வாரிசை நியமிக்கலாம். இவர் நம் பக்கத்தில் தகவல்களைப் பதியலாம்; நண்பர்களின் வேண்டுகோள்களை நிர்வகிக்கலாம். நம் முகப்பு பக்கம், அதில் உள்ள போட்டோக்கள் மற்றும் நாம் தேக்கி வைத்துள்ள தகவல்களை, இறந்தவர் சார்பாக நிர்வகிக்கலாம். ஆனால், அவர்கள் நாம் லாக் இன் செய்வது போல நம் பக்கத்தில் செல்ல முடியாது. நம் தனிப்பட்ட தகவல்களைப் படிக்க இயலாது. டைம்லைன் மற்றும் முன்பு நாம் இட்ட லைக் மற்றும் கமெண்ட்களைப் படிக்க முடியாது.

பல வாடிக்கையாளர்கள், தாங்கள் இறந்த பின்னர், தங்களின் பக்கத்திற்கு என்ன கதி ஏற்படும் எனக் கவலைப் பட்டதால், இந்த ஏற்பாட்டினை பேஸ்புக் மேற்கொண்டுள்ளது என பேஸ்புக் நிறுவன வலை மனைப் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. இதனை http://newsroom.fb.com/news/2015/02/adding-a-legacy-contact/ என்ற முகவரியில் உள்ள தளப் பக்கத்தில் காணலாம்.

பேஸ்புக் என்பது நண்பர்கள் மற்றும் நம் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு, ஒருவருக்கொருவர் தகவல்களை, அன்பைப் பகிர்ந்து கொள்வதற்கான இடம் ஆகும். ஆனால், பலருக்கு இதுவே நம்மை விட்டுப் பிரிந்த ஒருவரின் நினைவைப் போற்றும் இடமாகவும் உள்ளது. பேஸ்புக் வாடிக்கையாளர் ஒருவர் இறந்த பின்னர், அவரின் பக்கத்தினை அவரின் வாழ்க்கை, நண்பர்கள் மற்றும் அனுபவத்தின் நினைவிடமாக மாற்றிப் போற்றலாம்.

இந்த வகையில் இந்த 'Legacy Contact' டூல் நமக்கு உத

வுகிறது. ஒருவர் இறந்து விட்டார் என்பது உறுதியாகத் தெரிந்தவுடன், அவருடைய அக்கவுண்ட், அவரின் நினைவிடமாக மாற்றப்படும். அவரின் வாரிசாக அறியப்பட்டவர், அவருடைய காலப் பக்கத்தின் தலைப்பில் அவர் மரணம் குறித்த தகவலை அமைக்கலாம். இதுவரை அவருடன் தொடர்பில் இல்லாமல், தற்போது பேஸ்புக் தளத்தில் இணையும் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வேண்டுதல்களுக்குப் பதில் அளிக்கலாம்.

பக்கத்தில் உள்ள படத்தையும், கவர் போட்டோவினையும் அப்டேட் செய்திடலாம்.

இந்த வாரிசை நியமிப்பவர், தன் மரணத்திற்குப் பின்னால், தன் வாரிசாகச் செயல்பட இருப்பவர், தன்னுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல்கள், போட்டோக்கள் ஆகியவற்றைத் தரவிறக்கம் செய்திட முன்பாகவே அனுமதி அளிக்கலாம். ஆனால், வாரிசாகச் செயல்படுபவர், இறந்தவர் போல அவர் பக்கத்தில் லாக் இன் செய்து, செயல்பட முடியாது. அவரின் தனிப்பட்ட தகவல்களைப் பெறவும் முடியாது.

இந்த வாரிசு நியமனம் செய்திட, எப்படி 'Legacy Contact' டூலைப் பயன்படுத்துவது? உங்கள் பக்கம் சென்று செட்டிங்ஸ் (settings) திறக்கவும். தொடர்ந்து Security தேர்ந்தெடுக்கவும். பின்னர், அப்பக்கத்தின் கீழாக உள்ள Legacy Contact என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இதனைத் தேர்ந்தெடுத்த பின்னர், நீங்கள் வாரிசாக நியமிப்பவருக்கு, மெசேஜ் ஒன்று அனுப்பலாம். விருப்பப்பட்டால், தேர்ந்தெடுத்த தகவல்களை, படங்களின் தொகுதியை தரவிறக்கம் செய்திட அனுமதி தரலாம்.

குறிப்பிட்டவர் இறந்த பின்னர், அத்தகவல் உறுதி செய்யப்பட்ட பின்னர், அவரின் பக்கத்தில் அவரின் பெயருக்கு மேலாக, "அவர் நினைவாக" என்னும் பொருளில், "Remembering" என்ற சொல் சேர்க்கப்படும்.

இந்த வாரிசு அமைக்கும் டூல், முதலில் அமெரிக்க நாட்டின் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. பின்னர், படிப்படியாக, மற்ற நாட்டவருக்கும் வழங்கப்படும்.

புகை பிடிப்பதை நிறுத்த பல வழிகள்

என் நண்பர்கள் பலர் தாங்கள் புகை பிடிப்பதனை நிறுத்த இருப்பதாகக் கூறி, அதற்கான நாளையும் அறிவிப்பார்கள். புத்தாண்டு தொடக்கத்தில் இத்தகைய சபதங்களை எடுப்பவர்களே அதிகம். இதில் என்ன வேடிக்கை எனில், இவர்களில் பலர் அடுத்த ஆண்டும் இதே அறிவிப்பை வெளியிடுவார்கள். அண்மைக் காலமாக, சிலர், உண்மையிலேயே புகை பிடிப்பதை நிறுத்த முயற்சிப்பதாகவும், அதற்கான இணைய தளம் எதுவும் உள்ளதா எனக் கேட்டார்கள். அனைவரும் இணையம் பயன்படுத்துவோர் என்பதால், அவர்களுக்கு இணையம் நல்ல கட்டுப்பாடு அதிகாரியாகச் செயல்படும் என எண்ணி, அப்படிப்பட்ட ஒன்றை இணையத்தில் தேடினேன். அப்போதுதான் என் கண்ணில் பட்டது http://smokefree.gov/. இந்த தளம் இது போல விருப்பம் உள்ளவர்களைத் திசை மாறாமல் கொண்டு செல்கிறது. அதற்குப் பல வழிகளைக் கையாள்கிறது.

இந்த இணைய தளம் சென்றவுடன், முதலில் புகை பிடிப்பதிலிருந்து வெளியேற உங்களைத் தயார் செய்து கொள்கிறீர்களா? என்ற வினாவுடன் ஒரு பிரிவினைப் பார்க்கலாம். ஏனென்றால், வெகு காலம் புகை பிடிக்கும் ஒருவர், நிச்சயமாய் நிறுத்துவதற்கான முடிவினை எடுக்க வேண்டும். அதில் உறுதியாய் இருக்க வேண்டும். பின்னர், அடுத்து தரப்படும் பிரிவில், எந்த எந்த வழிகளில்

புகை பிடிப்பதனை நிறுத்தலாம் என்று பல வழிகள் எடுத்துரைக்கப்படுகின்றன. மேலும், இந்தப் பழக்கத்தினால் ஏற்படும் மன அழுத்தம், சத்தான உணவினை எடுத்துக் கொள்வது, உடற்பயிற்சிகளால் நல்ல செயல்பாட்டுடன் இருப்பது எனப் பல பிரிவுகளில் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. புகைப்பவர்கள் எல்லாரும் ஒரு முறை இந்த தளம் சென்று பார்த்தால், நமக்காக இத்தனை முயற்சிகள் எடுத்து தகவல்களைத் தந்திருக்கிறார்களே என்று ஆச்சரியப்பட்டு, புகைப்பதனை நிறுத்த முயற்சிப்பீர்கள். இந்த இணைய தளத்தின் முகவரி http://smokefree.gov/

வேர்ட் டிப்ஸ்...

தலைப்புகளைத் தானாக அமைக்க

நூல்கள் மற்றும் பருவ இதழ்களைத் தயாரிக்கையில், வேர்ட் டாகுமெண்ட்களில், சில குறிப்பிட்ட படங்கள், அட்டவணைகள், டேபிள்கள் ஆகியவற்றிற்கு தலைப்புகள் அமைத்திடுவோம். எடுத்துக் காட்டாக, டாகுமெண்ட்களில் உள்ள அனைத்து டேபிள்களுக்கும் "Table" எனத் தலைப்பிட்டு, ஒவ்வொன்றையும் "Table1,Table2, Table3" என அமைக்கத் திட்டமிடுவோம். வேர்ட் இதனை உணர்ந்து ஒவ்வொருமுறை டேபிள் அமைக்கும் போதும், தானாகவே இந்த தலைப்பினை அமைத்துக் கொள்ளும் வகையில், செட் செய்திடலாம். இதே போல படங்கள் மற்றும் பிற ஆப்ஜெக்ட்களை அமைக்கையிலும் இந்த தலைப்புகளைக் கொண்டு வரலாம். இதற்குக் கீழ்க்காணும் முறையில் செட்டிங்ஸ் அமைக்கவும்.

1. டாகுமெண்ட்டைத் திறந்து கொள்ளுங்கள். கேப்ஷன் டயலாக் பாக்ஸைக் கொண்டு வாருங்கள். இதற்கு, உங்கள் வேர்ட் தொகுப்பு வேர்ட் 2007க்கு முந்தையதாக இருந்தால், Insert அழுத்தி, கிடைக்கும் மெனுவில் Reference>Caption எனத் தேர்ந்தெடுக்கவும். இப்போது Caption என்ற சிறிய கட்டம் கிடைக்கும். இதில் நீங்கள் தர விரும்பும் தலைப்பு மற்றும் இந்த தலைப்பு எதற்காக என்பதை டேபிள், படம் மற்றும் வேறு ஆப்ஜெக்ட் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
2. வேர்ட் 2007 ஆக இருந்தால், ரிப்பனில் References டேப் தேர்ந்தெடுத்து, பின்னர் Captions குரூப்பில் Insert Caption என்பதில் கிளிக் செய்திடவும்.
3. அடுத்து AutoCaption பட்டனில் கிளிக் செய்திடவும். வேர்ட் இப்போது AutoCaption டயலாக் பாக்ஸைக் காட்டும். இதில் ஒரு ஆப்ஜெக்ட் பாக்ஸ் கிடைக்கும். எந்தவிதமான ஆப்ஜெக்ட் என்பதனை இதில் தேர்ந்தெடுத்து டிக் மார்க் அமைக்கவும். எடுத்துக் காட்டாக, நீங்கள் அமைக்கும் டேபிள்களுக்கான தலைப்பு அமைக்க விரும்பினால், Microsoft Word Table என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இங்கு Use Label என்ற கீழ் விரி மெனுவினைப் பயன்படுத்தி, எந்த சொல் டேபிள் அல்லது வேறு ஆப்ஜெக்ட் மேலாகத் தலைப்பாக வர வேண்டுமோ, அந்த சொல்லை டைப் செய்திடவும். இதனை அடுத்து Position என்ற கீழ்விரி மெனுவினைப் பயன்படுத்தி, இந்த தலைப்பு எங்கு வர வேண்டுமோ, அந்த இடத்தினைத் தேர்ந்தெடுக்கவும். இவை எல்லாம் முடிந்த பின் ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

டெக்ஸ்ட் எல்லைக் கோடு பயன்படுத்த

வேர்ட் டாகுமெண்ட் தயாரிப்பவர்கள், Print Layout வியூவில் தங்கள் டெக்ஸ்ட்டை அமைத்தால், அதில் காட்சி அளிக்கும் டெக்ஸ்ட் எல்லைக் கோடு அவர்களுக்கு மிகவும் உதவியாய் இருப்பதைக் காணலாம். இவை புள்ளிகளால் ஆன கோடுகள். நீங்கள் அமைக்கும் டெக்ஸ்ட் எந்த அளவிற்குள் மட்டுமே இருக்கும் என்பதனைக் காட்டும். இந்த டெக்ஸ்ட் எல்லைக் கோடுகளின் டிஸ்பிளேயைக் கண்ட்ரோல் செய்திட கீழ்க்காணும் வழிகளைப் பின்பற்றவும்.

1. Word Options டயலாக் பாக்ஸைக் கொண்டு வரவும். வேர்ட் 2007ல், ஆபீஸ் பட்டன் கிளிக் செய்து, கீழாக உள்ள Word Optionsபட்டனை கிளிக் செய்திட வேண்டும்.
2. இந்த டயலாக் பாக்ஸின் இடது பக்கம் உள்ள Advanced என்பதில் கிளிக் செய்திடவும்.
3. இங்கு கிடைக்கும் ஆப்ஷன்ஸ் பட்டியலில் மவுஸை உருட்டிக் கொண்டு செல்லவும். Show Document Content என்ற பிரிவில் நிறுத்தவும்.
4. Show Text Boundaries என்ற செக் பாக்ஸில் டிக் அடையாளம் ஏற்படுத்தினால், டெக்ஸ்ட் எல்லைக் கோடு காட்டப்படும். எடுத்து விட்டால் காட்டப்பட மாட்டாது.

தேவையானதை ஏற்படுத்திய பின்னர், ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

நீளவரியை மடக்கி அமைக்க

வேர்ட் டாகுமெண்ட் ஒன்றை அமைக்கையில், பல வேளைகளில், நீளமான இணைய முகவரி ஒன்றை அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இணைய முகவரிகளுக்கான லிங்க் எப்போதும் ஒரே சொல் போல நீளமாக இருக்கும். இது வலது மார்ஜின் அருகே வருகையில், அதனை ஒரு சொல்லாக எடுத்துக் கொண்டு, வேர்ட் புரோகிராம், அந்த இணைய முகவரி முழுவதையும், அடுத்த வரிக்குக் கொண்டு செல்லும். இதனை Word Wrapping எனக் கூறுகிறோம்.

இதனால் வலது மார்ஜினில் அழகின்றி இடைவெளி ஏற்படும். இரண்டு பக்கமும் அலைன் மெண்ட் எனில், முதல் வரியில் எழுத்துக்களுக்கிடையே அழகற்ற இடைவெளி ஏற்படும். இந்த சிக்கலின்றி அமைக்க வேர்ட் ஓர் ஆப்ஷன் தந்துள்ளது. அதனைத் தேர்ந்தெடுத்து அமைத்துவிட்டால், இணைய முகவரி அல்லது மிக நீளமான சொல் தேவைப்பட்ட இடத்தில் பிரிக்கப்பட்டு அமைக்கப்படும்.

டாகுமெண்ட்டைத் திறந்து கர்சரை எந்த இடத்தில் இணைய முகவரியைப் பிரிக்க வேண்டுமோ, அந்த இடத்தில் கொண்டு செல்லவும். பொதுவாக ஸ்லாஷ் எனப்படும் சாய்வு கோட்டின் அருகே பிரிக்க விரும்புவோம். இந்த இடத்தில் கர்சரைக் கொண்டு சென்று நிறுத்தவும். அடுத்து Insert டேப்பில் கிளிக் செய்திடவும். அடுத்து Symbols குருப்பில் Symbol என்பதில் கிளிக் செய்திடவும். பின்னர், More Symbols என்பதைத் தேர்ந்தெடுத்தால், Symbols டயலாக் பாக்ஸ் திறக்கப்படும். வேர்ட் 2003ல், Insert மெனுவிலேயே Symbol பிரிவினைப் பெறலாம். இதனை அடுத்து, Special Characters என்ற டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும். கிடைக்கும் விண்டோவில், No -Width Optional Break என்பதில் கிளிக் செய்திடவும்.

இவ்வாறு பிரித்துவிடப்பட்டுள்ளதா என்று நீங்கள் யு.ஆர்.எல். முகவரியை ஸ்கிரீனில் பார்த்து சொல்ல முடியாது. ஆனால் பிரிக்கப்பட்டிருக்கும். இதனைக் கட்டாயம் பார்க்க வேண்டும் என எண்ணினால், பாராகிராப் பிரேக் காட்டுவதற்கான ஆப்ஷனைத் தேர்ந்தெடுத்தால், அனைத்து பாரா மார்க்கர்களுடன், இந்த பிரித்த இடமும் காட்டப்படும். பிரித்த இடத்தில் சிறிய நீள் கட்டம் தெரியும். இணைய முகவரி தான் என்றில்லை. எந்த நீள சொல்லையும் இது போல பிரித்து அமைக்கலாம்.

எண்களைக் கொண்டு மேற்கோள் குறிகள்

வேர்ட் டாகுமெண்ட் உருவாக்குகையில், பல இடங்களில் மேற்கோள் குறிகளைப் பயன்படுத்துகிறோம். சில வேளைகளில், நாம் ஒரு வகை குறியீட்டினை அமைத்தால், வேர்ட் தானாக அதனை மாற்றும். இது மாறா நிலையில் தானாக மாற்றி அமைக்கும் வகையில் வேர்ட் செட் செய்யப்பட்டிருப்பதுதான் காரணம். இவற்றை மாற்றாமல் அமைக்க, ஆட்டோ கரெக்ட் விண்டோ பெற்று (Tools | AutoCorrect// AutoFormat As You Type மாற்ற வேண்டும். இதற்கு இன்னொரு வழியும் உள்ளது. இந்த மேற்கோள் அடையாளக் குறிகள் அப்படியே உங்களுக்குத் தேவை என்றால் அந்த அடையாளங்களை கீ போர்டில் வேறு ஒரு வழி மூலம் ஏற்படுத்தலாம்.

ஆல்ட் அழுத்தியவாறு 0147 என்ற எண்ணை நம்லாக் கீ போர்டில் டைப் செய்தால், தொடக்க நிலையில் அமைக்கப்படும் டபுள் கொட்டேஷன் அடையாளம் கிடைக்கும்.

ஆல்ட் அழுத்தியவாறு 0148 என்ற எண்ணை நம்லாக் கீ போர்டில் டைப் செய்தால், முடியும் நிலையில் அமைக்கப்படும் டபுள் கொட்டேஷன் அடையாளம் கிடைக்கும்.

ஆல்ட் அழுத்தியவாறு 0145என்ற எண்ணை நம்லாக் கீ போர்டில் டைப் செய்தால், தொடக்க நிலையில் அமைக்கப்படும் சிங்கிள் கொட்டேஷன் அடையாளம் கிடைக்கும்.

ஆல்ட் அழுத்தியவாறு 0146 என்ற எண்ணை நம்லாக் கீ போர்டில் டைப் செய்தால் முடிவு நிலையில் அமைக்கப்படும் சிங்கிள் கொட்டேஷன் அடையாளம் கிடைக்கும். ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த எண்களை நம் லாக் கீயினை அழுத்திப் பின் அதன் கீழாக உள்ள கீ போர்டு மூலம் டைப் செய்திட வேண்டும்.

Microsoft Excel Tips & Tricks எக்ஸெல் டிப்ஸ்...

சார்ட்களில் டேட்டா லேபிள்

எக்ஸெல் ஒர்க் ஷீட்டில் சார்ட்களுக்கு டேட்டா லேபிள் அமைப்பது அந்த சார்ட் தெரிவிக்கும் முக்கிய தகவல்களை எடுத்துக் காட்டும். நீங்கள் அமைக்கும் சார்ட் பார்மட்டைப் பொறுத்து இந்த லேபிள்கள் தகவல்களைக் காட்டுவதில் சிறப்பிடங்களைப் பெறுகின்றன. இது எப்படி என்று பார்க்கலாம்.

எடுத்துக் காட்டாக நீங்கள் ஒரு பை – சார்ட் அமைத்தால் அதில் டேட்டாவிற்கான லேபிள் இல்லை என்றால் நிச்சயம் தகவல்கள் என்ன சொல்ல வருகின்றன, ஒன்றுக்கொன்று எப்படித் தொடர்புடையன என்று தெரியாது. இந்த டேட்டா லேபிள்களை எப்படி அமைப்பது என்று காணலாம். எக்ஸெல் 2007 பயன்படுத்துபவர்களுக்கு:

1. முதலில் எந்த சார்ட்டுக்கு டேட்டா லேபிள் அமைக்க வேண்டுமோ அதன் மீது கிளிக் செய்து இயக்கவும்.
2. லேஅவுட் டேப் ரிப்பன் காட்டப்படுவதனை உறுதி செய்திடவும்.
3. இதில் உள்ள Data Labelsஎன்ற டூலைக் கிளிக் செய்திடவும். இந்த வகையில் எந்த இடத்தில் டேட்டா லேபிள்களை அமைக்க வேண்டும் என்பதற்கு பல ஆப்ஷன்களை எக்ஸெல் தருகிறது.
4. எங்கிருந்தால் சிறப்பாக அந்த லேபிள் தன் பணியைச் செய்திடுமோ அங்கு வைக்கவும்.

அடுத்து எக்ஸெல் 2003 பயன்படுத்துபவர்களுக்கு:

1. முதலில் எந்த சார்ட்டுக்கு டேட்டா லேபிள் அமைக்க வேண்டுமோ அதன் மீது கிளிக் செய்து இயக்கவும்.
2. பின் Chart மெனுவிலிருந்து Chart Options என்னும் பிரிவினைத் தேர்ந்தெடுக்கவும். இங்கே Chart Options டயலாக் பாக்ஸ் கிடைக்கும்.
3. இந்த பாக்ஸில் உள்ள Data Lables என்னும் டேபினைத் தேர்ந்தெடுக்கவும்.இந்த டயலாக் பாக்ஸில் இடது பக்கம் பல்வேறு வகையான டேட்டா லேபிள்களைக் காட்டும். உங்களுடைய சார்ட்டின் தன்மைக்கேற்ப காட்டப்படும் டேட்டா லேபிள்களின் எண்ணிக்கை மற்றும் தன்மை மாறும்.
4. இந்த டேட்டா லேபிள்களைப் பார்த்தால் அடிப்படையில் ஐந்து வகைகள் இருப்பதை உணரலாம். ஒவ்வொன்றும் டேட்டாவின் தன்மை மற்றும் லேபிளின் வகை ஆகியவற்றை இணைப்பதில் வேறுபட்டிருக்கும். இவற்றிலிருந்து உங்கள் நோக்கத்தை வெளிக் காட்டும் சிறந்த லேபிள்களைத் தேர்ந்தெடுக்கலாம்.
5. OK கிளிக் செய்திடவும். சார்ட் லேபிள்களுடன் வடிவமைக்கப்பட்டு காட்டப்படுவதற்கு தயாராக இருக்கும்.

வரிசை வகை மாற்றம்

எக்ஸெல் ஒர்க் ஷீட் ஒன்றை உருவாக்கியிருப்பீர்கள். தொடர்ந்து வரும் டேட்டாவை கணக்கிட்ட பின்னர் நெட்டு வரிசையில் உள்ளதைப் படுக்கை வரிசையிலும், படுக்கை வரிசையில் உள்ளதை நெட்டு வரிசையிலும் மாற்றினால் இன்னும் சிறப்பாக இருக்கும் என நீங்கள் திட்டமிடலாம். அல்லது ஏதேனும் ஒரு வகையில் உள்ளதை மட்டும் மாற்றி அமைக்க இன்னொரு ஒர்க் ஷீட்டில் எண்ணலாம். இதனை எப்படி மாற்றுவது? நான்கு அல்லது பத்து செல்கள் என்றால் ஒவ்வொன்றாக டைப் செய்துவிடலாம் என்று நீங்கள் முயற்சிக்கலாம். இதுவே அதிகமான எண்ணிக்கையில் செல்கள் உள்ள ஒர்க் ஷீட்டாக இருந்தால் என்ன செய்வது?

எக்ஸெல் இதற்கு அருமையான ஒரு வழி தந்துள்ளது. எந்த செல்களில் உள்ளதை மாற்ற வேண்டும் என திட்டமிடுகிறீர்களோ அந்த செல்கள் அனைத்தையும் தேர்ந்தெடுங்கள். பின் கண்ட்ரோல்+சி அழுத்தி காப்பி செய்திடுங்கள். அடுத்து எங்கு மாற்றத்துடன் வரிசையை அமைக்க வேண்டுமோ அந்த இடத்தில் முதல் செல்லுக்குச் செல்லுங்கள். பின் ALT + E + S அழுத்துங்கள்.அல்லது எடிட் மெனு சென்று பேஸ்ட் ஸ்பெஷல் என்னும் பிரிவில் கிளிக் செய்திடுங்கள். இப்போது பேஸ்ட் ஸ்பெஷல் என்னும் சிறிய விண்டோ கிடைக்கும். இதில் பல ஆப்ஷன்ஸ் தரப்பட்டிருக்கும். எல்லாவற்றிற்கும் கீழாக ட்ரான்ஸ்போஸ் (Transpose) என்று ஒரு ஆப்ஷன் கிடைக்கும். அதனைத் தேர்ந்தெடுத்து ஓகே கிளிக் செய்தால் நீங்கள் எதிர்பார்த்தபடி மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும்.

கூகுள் டாக் இனி இயங்காது

விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில் இயங்கி வந்த "கூகுள் டாக்" வசதி இனி வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்காது. ஒருவருக்கொருவர் உரையாடிக் கொள்ள மிகவும் பயனுள்ள கருவியாக ''ஜி டாக்" எனப்படும் கூகுள் டாக் இயங்கி வந்தது. ஆனால், தான் வழங்கி வரும் வசதிகள் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வரும் செயல் பாட்டினை கூகுள் மேற்கொண்டு வருவதன் எதிரொலியாக, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது. தான் வழங்கும் கூகுள் Hangouts மூலம் இந்த வசதியைப் பெற்றுக் கொள் ளுமாறு, தன் வாடிக்கையாளர்களுக்கு, கூகுள் அறிவுறுத்தியுள்ளது. பிப்ரவரி 23 முதல் "ஜி டாக்" வசதியை கூகுள் நிறுத்தி உள்ளது. (இனி, தர்ட் பார்ட்டி புரோகிராம் மூலம் (எ.கா. http://goo.gl/FSbCX5) இதனைத் தொடந்து மேற்கொள்ளலாம் என்றாலும், அவை கூகுள் அங்கீகாரம் பெற்றவை இல்லை என்பதால், ஏதேனும் பிரச்னை ஏற்படலாம் என்று கூகுள் எச்சரித்துள்ளது.

இதன் பின்னணி என்ன என்று பார்க்கலாம். உலகில் மிகப் பெரிய அளவில், மொபைல் சாதனங்களில் தன்னுடைய ஆப்பரேட்டிங் சிஸ்டத்தினைக் கொண்டு வந்த கூகுள் நிறுவனத்தால், அனைவரும் நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ளக் கூடிய இன்ஸ்டண்ட் மெசேஜிங் சிஸ்டத்தினைத் தர இயலவில்லை. முதலில் வாட்ஸ் அப் மெசேஜிங் திட்டத்தினை கூகுள் வாங்கிட முயற்சி செய்தது. 1000 கோடி டாலர் வரை தர முன் வந்தது. ஆனால், பேஸ்புக் நிறுவனம், மிகச் சாதுர்யமாக, அதனை 1,900 கோடி டாலருக்குத் தட்டிச் சென்றது.

எனவே, கூகுள் நிறுவனத்திற்கு, கூகுள் ப்ளஸ் சார்ந்த தன்னுடைய "ஹேங் அவுட்ஸ்" புரோகிராமினை விட்டால் வேறு வழி இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. ஹேங் அவுட், மெசேஜ் மற்றும் அழைப்புகளுக்கான வசதி கொண்டதாக இயங்குகிறது. இதில் பல கூடுதல் வசதிகள் இருந்தாலும், தினந்தோறும் கூகுள் தரும் வசதிகளைப் பயன்படுத்துபவர்கள் கூட, கூகுள் ஹேங் அவுட் தரும் வசதிகளைப் பயன்படுத்தத் தயாராய் இல்லை.

அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி, சென்ற ஜனவரி 2015ல், வாட்ஸ் அப் 70 கோடி வாடிக்கையாளர்களையும், வி சேட் (WeChat) 50 கோடி பேரையும் கொண்டுள்ளது. தற்போதுதான் இந்த பிரிவில் வந்திருக்கும் ஹைக் (Hike) 3.5 கோடி பேரைத் தன் வாடிக்கையாளர் களாகக் கொண்டுள்ளது. ஆனால், கூகுள் தரும் ஹேங் அவுட் வசதியை மிகக்

குறைவானவர்களே பயன்படுத்தி வருகின்றனர். எத்தனை பேர் மாதந்தோறும் இதனைப் பயன்படுத்துகின்றனர் என்ற தகவலை கூகுள் வெளியிடவில்லை.

கூகுள் போன் அழைப்புகள், எஸ்.எம்.எஸ். மெசேஜிங் மற்றும் வீடியோ கான்பரன்சிங் ஆகிய அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வர முடிவு செய்து, அதற்கு ஜி டாக் தேர்ந்தெடுத்தது. ஆனால், இப்போது திடீரென, அதனையும் விட்டுவிட்டு, ஹேங் அவுட் வசதியைப் பயன்படுத்துமாறு வாடிக்கையாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

கூகுள் ஹேங் அவுட், மற்றவற்றில் நமக்குக் கிடைக்காத சில வசதிகளைக் கொண்டுள்ளது. எடுத்துக் காட்டாக, இதில் பலர் ஒரு குழுவாக சேட்டிங் செய்திடலாம். இந்த வசதி மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது. ஆனால், பலர் இந்த வசதி இருப்பதனை அறியாதவர்களாகவே உள்ளனர். அண்மையில் கூகுள் ஹேங் அவுட் புரோகிராமிற்கு வெளியிடப்பட்ட அப்டேட் பைல், அதனை ஸ்கைப் புரோகிராமிற்குப் போட்டியாக அமைத்தது.

ஏ.சி.டி. பைபர் நெட் தரும் அதிவேக இணைய இணைப்பு

நொடிக்கு ஒன்று அல்லது இரண்டு மெகா பிட் வேகத்தில் இணைய இணைப்பு கிடைப்பதே அரிதான வேகம் என்று நாம் பழக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், நொடிக்கு 20, 40 மற்றும் 60 மெகா பிட்ஸ் வேகத்தில், குறைந்த கட்டணத்தில் இணைய இணைப்பு தரும் பணியை, பெங்களூருவைச் சேர்ந்த அட்ரியா கன்வெர்ஜென்ஸ் டெக்னாலஜிஸ் (Atria Convergence Technologies (ACT))என்னும் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

ஏ.சி.டி. பைபர்நெட் என்ற பெயருடன் இயங்கும் இந்த நிறுவனம், முன்பு ஹைதராபாத்தில் இயங்கி வந்த அதிவேக பிராட்பேண்ட் இணைப்பு தந்து வந்த பீம் டெலி நிறுவனத்தை வாங்கியது நினைவிருக்கலாம். பீம் டெலி நிறுவனம், 2011 ஆம் ஆண்டில், மாதம் ஒன்றுக்கு ரூ. 2,500க்கு 20 மெகா பிட்ஸ் வேகத்தில் இணைய இணைப்பினைத் தந்து வந்தது.

இதனை வாங்கி, தற்போது ஏ.சி.டி. பைபர்நெட் என்ற பெயரில் தன்னை விரிவாக்கிக் கொண்ட நிறுவனம், தற்போது ஆந்திர மாநிலம், தெலுங்கானா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டில் பல்வேறு இணைய இணைப்பு திட்டங்களைத் தருகிறது.

மாதம் ஒன்றுக்கு ரூ.1,999 கட்டணத்தில் அளவில்லா டேட்டா பயன்படுத்தும் வகையில், நொடிக்கு 60 மெகா பிட்ஸ் வேகத்தில் இணைய இணைப்பினைத் தருகிறது. ரூ.1,399க்கு, 40 மெகா பிட்ஸ் வேகமும், ரூ. 1,049க்கு, 20 மெகா பிட்ஸ் வேகத்திலும் இணைப்பினைத் தரும் திட்டங்களை அறிவித்துள்ளது.

விரைவில் வர்த்தகச் செயல்பாட்டிற்கு 250 மெகா பிட்ஸ் வேகத்தில் இணைப்பு தரும் திட்டத்தினையும் மேற்கொள்ள இருக்கிறது.

ஏ.சி.டி. நிறுவனம், இணைய இணைப்பிற்கு ஆப்டிகல் பைபர் கேபிளைப் பயன்படுத்துகிறது. இணைய இணைப்புடன் கேபிள் டி.வி. இணைப்பினையும் தருகிறது.

தற்போது ஹைதராபாத் நகரில் 4 லட்சம் சந்தாதாரர்களையும், பெங்களூருவில் 1.5 லட்சம் பேர்களையும் இந்நிறுவனம் கொண்டுள்ளது.

தங்கள் நிறுவனத்தின் விரிவாக்கப் பணிகளுக்கான கூடுதல் மூலதனத்தினை, பன்னாட்டளவில் இந்த நிறுவனம் பெற்றுள்ளது. ஒவ்வொரு நகருக்கும் ரூ.100 கோடி மூலதனச் செலவு செய்திட திட்டமிட்டுள்ளது.

இந்திய அளவில் இந்த நிறுவனத்தின் செயல்பாடுகளை மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஏனென்றால், தற்போது இணைய சேவை வழங்கும் நிறுவனங்கள், கட்டணத்தை அதிக அளவில் வசூலித்து வரும் நிலையில், ஏ.சி.டி. நிறுவனம் வரும் நிலையில், போட்டியின் காரணமாக, கட்டணம் அதிக அளவில் குறைக்கப்படும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இன்டர்நெட் டாட் ஓ.ஆர்.ஜி. எதற்காக?

–பாரதி–

சென்ற இதழில், பேஸ்புக் மற்றும் ரிலையன்ஸ் நிறுவனம் இணைந்து இந்தியாவில் இலவச இணைய இணைப்பினைத் தரும் திட்டம் குறித்துத் தகவல்கள் தரப்பட்டன. Internet.org என்னும் டூல் குறித்தும் அதனைச் செயல்படுத்துவது குறித்தும் டிப்ஸ் இருந்தன. பல வாசகர்கள், அந்த தளம் மற்றும் டூல் குறித்தும் கேள்விகள் கேட்டனர். விரிவான தகவல்களைத் தர வேண்டும் எனக் கேட்டுள்ளனர். அது மட்டுமின்றி, இந்த தளம் அமைத்தது குறித்தும், எப்படி மற்ற நாடுகளில் இயங்கும் தன்மை இங்கும் இணைவாகச் செயல்படுகிறது என்பது குறித்தும் தகவல்கள் தரும்படி கேட்டுள்ளனர். இதோ அவர்களின் விருப்பங்களை நிறைவேற்றும் தகவல்கள்.

இன்டர்நெட் டாட் ஓ.ஆர்.ஜி. என்பது என்ன?

பேஸ்புக் நிறுவனம், பெரிய அளவில் இயங்கும் மொபைல் போன் நிறுவனங்களுடனும், சாம்சங் எரிக்சன் மீடியா டெக், நோக்கியா, ஆப்பரா சாப்ட்வேர் மற்றும் குவால்காம் போன்ற மற்ற தகவல் தொடர்பு சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுடனும் இணைந்து, 2013 ஆம் ஆண்டில், Internet.org என்பதை அறிமுகப்படுத்தியது. இதன் முக்கிய நோக்கம், வளரும் நாடுகளில் இணைய சேவைகளை முன்னேற்றமடையச் செய்வதுதான்.

இணையம் என்பது நம் வாழ்க்கையின் அடிப்படைக் கட்டமைப்பில் ஒன்றாக மாறிய பின்னர், பல நாடுகளில் மிகக் குறைந்த அளவிலேயே இணைய இணைப்பு பயன்பாடு உள்ளது என்பது, அந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் தடுப்பதாகும். இலவச இணைப்பினை இந்த நாட்டின் மக்களுக்குத் தரும்போது, இந்த தடையை நீக்குவதாக அமையும். பேஸ்புக் சமூக தளம் இந்த இணைப்பினை வழங்கும் போது, இலவசமாகத் தகவல் பரப்புதல் மேற்கொள்ளப்படும். மக்களுக்கு இடையே தொடர்பு அதிகமாகும். இந்த தகவல் ஓட்டமும், மக்கள் இணைப்பும் நிச்சயமாய் நல்ல பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும். இதன் மூலம், பேஸ்புக் உலக அளவில் 400 கோடி மக்களை இணைக்க முயற்சிக்கிறது.

இதனால் பேஸ்புக் நிறுவனத்திற்கு என்ன லாபம்?

வளரும் நாடுகளில், இந்த Internet.org முயற்சி மக்களுக்கு ஒரு கவர்ச்சியான விஷயமாகும். இதனால், பேஸ்புக் தளம் மக்களிடையே அதன் இலக்கினையும் தாண்டி வளர்ச்சி அடைகிறது. இந்த முயற்சியின் மூலம், பல வளரும் நாடுகளில் ஆழமாகப் பதிகிறது. இந்த நாடுகள், தகவல் தொழில் நுட்பத்தில் வளரும் நாடுகள் ஆகும்.

இந்த வகையில் இந்தியா, பேஸ்புக் நிறுவனத்திற்கு பெரும் அளவில் வளர்வதற்கான வாய்ப்புகளைத் தருகிறது. சீனா, அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, இந்தியா உலக அளவில் மூன்றாவது இணையப் பயனாளர்களைக் கொண்டுள்ளது. ஏறத்தாழ 24.3 கோடி பேர் இணையத்தில் உலா வருகின்றனர். இருப்பினும் இந்திய ஜனத்தொகையில் பெரும்பாலானவர்கள், குறிப்பாக கிராமப் புறங்களில் இருப்பவர்களுக்குச் சரியான முறையில், வேகத்தில் இணைய

இணைப்பு கிடைப்பதில்லை. கிராமப் புறங்களில் இணையப் பயன்பாடு 19 சதவீதமே உள்ளது என்ற தகவல் இதனை உறுதிப்படுத்துகிறது. ஆனால், சீனா போன்ற நாடுகளில் கிராமப் புற இணையப் பயன்பாடு 46 சதவீதமாக உள்ளது என்ற தகவல், இந்தியாவில் இதை உயர்த்த ஏதாவது முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்ற அவசியத்தை உணர்த்துகிறது.

இதனை உயர்த்த வாய்ப்புகள் இந்தியாவில் தற்போது அதிகரித்து வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 14% வளர்ச்சியைத் தற்போது இந்தியப் பயனாளர்கள் மேற்கொண்டு வருகின்றன. மேலும், இந்தியாவில் மொபைல் போன் பயன்பாடு 40% அதிகரித்து வருகிறது. இது சீனாவிலும், பிரேசில் நாட்டிலும், 25% அளவிலேயே உள்ளது என்ற நிலையில் இதனை அடிப்படையாகக் கொண்டு, இந்தியா இணையப் பயன்பாட்டினை அதிகரிக்கலாம் என்பதே, பேஸ்புக் நிறுவனத்தின் திட்டமாக உள்ளது. இதனால், பேஸ்புக் வளர்ச்சி அடைவதுடன், விளம்பரங்கள் சார்ந்த வர்த்தகமும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கலாம். பேஸ்புக் தளத்தின் விரிவாக்கத் திட்டங்களுக்கு இது உதவிடும். தற்போது பேஸ்புக் தளத்தின் வருமானத்தில், விளம்பரங்கள் பெரிய அளவில் பங்கெடுத்துள்ளன. விளம்பரதாரர்களுக்கும் இந்த முயற்சி அதிக வாய்ப்புகளை அளிக்கும்.

இந்தியாவில், ஏறத்தாழ 12 கோடி பேர் பயன்படுத்தும் தளமாக பேஸ்புக் வளர்ந்துள்ளது. இதன் வளர்ச்சியின் அடிப்படையில், உலகிலேயே 100 கோடி பேரைத் தன் வாடிக்கையாளர்களாகக் கொண்ட தளமாக வளர இதற்கு அனைத்து தகுதிகளையும் கொண்டுள்ளது.

வரும் நாட்களில், Internet.org பேஸ்புக் தளம் மற்றும் இந்திய இணையப் பயனாளர்கள் வளர்ச்சியில் முக்கியப் பங்கினைக் கொண்டிருக்கும். இது, மற்ற நாடுகளிலும் இந்த முயற்சியை மேற்கொள்ள பேஸ்புக் தளத்திற்கு உற்சாகத்தினையும் நம்பிக்கையையும் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

எந்த மக்கள் பயனடைவார்கள்?

Internet.org வசதியைப் பயன்படுத்த விரும்புபவர்கள், ரிலையன்ஸ் நிறுவனத்தின் மொபைல் சேவையினைப் பயன்படுத்துபவர்களாக இருக்க வேண்டும். மஹாராஷ்ட்ரா, தமிழ்நாடு, குஜராத், ஆந்திர மாநிலம், தெலுங்கானா மற்றும் கேரளா மாநிலங்களில் இருக்கும் ரிலையன்ஸ் வாடிக்கையாளர்கள் முதல் கட்டத்தில் இந்த வசதியினைப் பெறுகிறார்கள். இந்த தொலைதொடர்பு மண்டலங்களில் இயங்கும் ரிலையன்ஸ் வாடிக்கையாளர்கள் இந்த வசதியைப் பெறலாம் என்றாலும், இந்த திட்டம் இலக்கு வைப்பது, எந்தவித டேட்டா திட்ட இணைய இணைப்பும் இல்லாமல் இருக்கும் கிராமப் புற மக்களைத்தான். இவர்களுடன், இணைய இணைப்பிற்கான திட்டங்களுக்குச் செலவு செய்திட வசதியில்லாமல் இருப்பவர்களையும் இந்த திட்டம் முக்கியமாகக் குறி வைத்துள்ளது.

இவர்கள் 40 இணைய தளங்களை இலவசமாக அணுகலாம். தங்களுடைய மொபைல் போனில், ஆப்பரா மினி, அல்லது யு.சி. பிரவுசர் மூலம் Internet.org தளத்தை அணுகி, இந்த வசதியைப் பெறும் வழியைப் பெறலாம்.

மைக்ரோசாப்ட் லூமியா 532 டூயல்சிம் விலை ரூ. 6,499

மைக்ரோசாப்ட் நிறுவனம், அனைவரும் வாங்கும் விலையில், தன்னுடைய லூமியா 532 டூயல் சிம் ஸ்மார்ட் போனை, இந்தியாவில் ரூ. 6,499 என விலையிட்டு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த போனில், WVGA டிஸ்பிளே கொண்ட 4 அங்குல திரை உள்ளது. இதில் குவாட் கோர் ஸ்நாப்ட்ரேகன் 200 எஸ்.ஓ.சி. ப்ராசசர் 1.2 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்குகிறது. இதன் ஆப்பரேட்டிங் சிஸ்டம் விண்டோஸ் போன் 8.1. ப்ளாஷ் இல்லாத 5 மெகா பிக்ஸெல் திறன் கொண்ட பின்புறக் கேமராவும், வி.ஜி.ஏ. முன்புறக் கேமராவும் தரப்பட்டுள்ளன.

இதனை அறிமுகப்படுத்திய விழாவில், மைக்ரோசாப்ட் மொபைல் தென்னிந்தியப் பிரிவின் இயக்குநர் ஸ்ரீதர் பேசுகையில், முதன் முதலில் ஸ்மார்ட் போன் பயன்படுத்துபவர்கள், அதில் கிடைக்கும் அனைத்து வசதிகளிலும் எந்தவிதக் குறைபாடும் இன்றி தங்கள் போன் இருக்க வேண்டும். அதுவும் தாங்கள் வாங்கக் கூடிய விலையில் கிடைக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். அந்த வாடிக்கையாளர்களின் விருப்பத்தினை நிறைவேற்றும் வகையில் இந்த போன் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த போனின் சிறப்பம்சங்கள்:

800 X 480 பிக்ஸெல்கள் கொண்ட 4 அங்குல எல்.சி.டி. திரை

1.2 குவாட் கோர் ப்ராசசர், 1 ஜி.பி. ராம் நினைவகம், 8 ஜி.பி. ஸ்டோரேஜ் மெமரி, 128 ஜி.பி. வரை அதிகப்படுத்தும் வசதி, இரண்டு சிம் இயக்கம், 5 எம்.பி. கேமரா, வி.ஜி.ஏ.கேமரா, 11.6 மிமீ தடிமன், 136.3 கிரம் எடை, நெட்வொர்க் இணைப்பிற்கு 3ஜி, வை பி, புளூடூத் 4 மற்றும் ஜி.பி.எஸ். தொழில் நுட்பங்கள் உள்ளன. இதன் பேட்டரி 1,560 mAh திறன் கொண்டது. தொடர்ந்து 12 மணி நேரம் பேசும் திறன் அளிக்கிறது.

நல்ல பச்சை, இளஞ்சிகப்பு, வெள்ளை, கருப்பு வண்ணங்களில் இது கிடைக்கிறது.

ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் ஒன் ப்ளஸ் ஒன்

அழைப்பின் அடிப்படையில் மட்டுமே போன்களை விற்பனை செய்திடும் திட்டத்தினை ஒன் ப்ளஸ் நிறுவனம் தன் ஒன் ப்ளஸ் ஒன் போன்களுக்குக் கொண்டு வந்து புதுமையைப் படைத்தது. இந்திய வாடிக்கையாளர்களுக்குச் சென்ற பிப்ரவரி 10 அன்று, அனைவரும் அழைப்பு இல்லாமலேயே வாங்கிக் கொள்ளும் சலுகையைத் தந்தது. அத்துடன், எந்த நாட்டில் எல்லாம், தன் போன்கள் இணைய தளங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறதோ, அங்கு வாரத்தின் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமை அன்று, யார் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என அறிவித்துள்ளது. 16 ஜி.பி, கொள்ளளவு கொண்ட சில்க் ஒயிட் மற்றும் 64 ஜி.பி. கொள்ளளவு கொண்ட கருப்பு போன்களை, அழைப்பு இல்லாமலேயே வாங்கிக் கொள்ளலாம்.

கடந்த ஆறு மாதங்களாகவே ஒன் ப்ளஸ் ஒன் போன்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பன்னாட்டளவில், விற்பனைக்கு முன்னதாகவே, போன்களுக்கான கேட்பினைப் பதிவு செய்திடும் திட்டத்தினை, சென்ற அக்டோபரில் ஒன் ப்ளஸ் அறிமுகப்படுத்தியது. விற்பனைக்கு முந்தைய பதிவு சில மணி நேரத்தில் முடிக்கப்பட்ட நிலையில், எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாத விற்பனை 24 மணி நேரம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த விற்பனை திட்டங்கள் குறித்து, ஒன் ப்ளஸ் குளோபல் பிரிவின் இயக்குநர் கார்ல் பை கூறுகையில், சில மாதங்களாகவே, எளிதாக வாடிக்கையாளர்கள் ஒன் ப்ளஸ் போன்களை வாங்குவதற்கான வழிகள் குறித்து எண்ணி வந்ததாகவும், அதன் தொடர்ச்சியாக இந்த வழிகளை அறிவித்து நடைமுறைப்படுத்தியதாகவும் தன் வலைமனைச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஆனால், அழைப்பின் பேரில் போன் விற்பனை செய்திடும் திட்டம் தொடர்ந்து, செவ்வாய்க் கிழமை தவிர மற்ற ஆறு நாட்களில் மேற்கொள்ளப்படும் எனக் கூறியுள்ளார். பன்னாட்டளவில், ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் லண்டன் நேரத்திற்கு காலை 8 மணிக்கு, கட்டற்ற விற்பனை மேற்கொள்ளப்படும் என்றும், வாடிக்கையாளர்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.'

INTEX aqua STAR

இண்டெக்ஸ் அகுவா ஸ்டார் 2 ஸ்மார்ட்போன்

இண்டெக்ஸ் டெக்னாலஜிஸ் நிறுவனம், அண்மையில் தன்னுடைய அகுவா ஸ்டார் ஸ்மார்ட் போன் வரிசையில், அகுவா ஸ்டார் 2 (Aqua Star II) என்ற ஸ்மார்ட் போனை, அறிமுகப் படுத்தியது. இதில் FWVGA டிஸ்பிளே காட்டும் 5 அங் குல திரை, எல்.இ.டி. ப்ளாஷ் கொண்ட 8 மெகா பிக்ஸெல் திறன் கொண்ட கேமரா, ஆண்ட்ராய்ட் 4.4 கிட்கேட் ஆப்ப ரேட்டிங் சிஸ்டம், 1.2 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்கும் ப்ராசசர், பிக்ஸெல் திறன் முன்புறக் கேமரா இதன் சிறப்பம் சங்களாகும்.

இதில் 5 மெகா களை இயக் கொண்ட நெட்வொர்க் ஆகியவை இரண்டு சிம் இதனை அறி கலாம். 3ஜி துகையில், கிடைக்கிறது. மொபைல் முகப்படுத் இந்நிறுவன வர்த்தகப் பிரிவின் தலைவர், இந்த போனில் பாராட்டத் தக்க வகையில், சென்சார் செயல்படும் தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப் பிட்டார்.

இதன் மற்ற சிறப்பம்சங்கள்: 1 ஜி.பி. ராம் மெமரி, 8 ஜி.பி. ஸ்டோரேஜ் மெமரி, 32 ஜிபி வரை அதிகப்படுத்தும் வசதி, இரண்டு சிம் இயக்கம், நெட்வொர்க் இயக்கத்திற்கு 3ஜி, வை பி, புளூடூத் 4 மற்றும் ஜி.பி.எஸ். தொழில் நுட்பம். இதன் பேட்டரி 2,000 mAh திறன் கொண்டதாகும். இந்த போன் வெள்ளை, கருப்பு, நீலம் மற்றும் கிரே வண்ணங்களில் கிடைக்கிறது.

இதன் அதிக பட்ச விலை ரூ.5,999.

மொபைல் டிப்ஸ்

திரையில் உள்ள லிக்விட் கிறிஸ்டல் டிஸ்பிளே [LCD] மீது அழுத்தத்தைப் பிரயோகித்தால் திரை கெட்டுவிட வாய்ப்பு உள்ளது. எனவே பாக்கெட்டில் போனை வைத்திடுகையில் ஏதேனும் கூர்மையான அல்லது பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய பொருள் மொபைல் போனுடன் உரசிக் கொண்டிருக்கிறதா என்பதைக் கவனித்துச் செயல்படவும். போம் கவர்கள் அல்லது பிளாஸ்டிக் கவர்கள் இந்த வகையில் பாதுகாப்பு தரலாம்.

விண்டோஸ் இன்சைடர் புரோகிராம் என ஒன்று இயங்கி வருவது, தங்கள் கட்டுரையைப் படித்த பின்னரே தெரிய வந்தது. என் வகுப்புத் தோழர்கள் இதில் உறுப்பினர்களாகி, விண்டோஸ் 10 டவுண்லோட் செய்து, பயன்படுத்திப் பார்த்து வருகிறோம். பல செயல்பாட்டுப் பிழைகளை மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு அனுப்பி வருகிறோம். இதற்கு ஊக்கப்படுத்தியது நீங்கள் கடந்த இரு இதழ்களில் அளித்துள்ள விஸ்தாரமான தகவல்களே. அனைத்திற்கும் நன்றி.

கணிப்பொறியியல் பட்ட வகுப்பு மாணவர்கள், திருப்பூர்.

ப்ளக் இன் புரோகிராம்களை இயக்குவதில் இவ்வளவு பிரச்னைகளா? ஆனாலும், முழுமையாக அவற்றை விட்டு செயல்படவும் முடியாது. இருப்பினும், எவற்றை விடுத்து, எவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்ற உங்களின் தெளிவான வழி காட்டல் மிகவும் பயனுள்ளதாய் உள்ளது. மிக்க நன்றி.

என். ஜெய லஷ்மி, திருவண்ணாமலை.

ப்ளக் இன் புரோகிராம்கள் குறித்த தங்கள் கட்டுரையைப் படித்தவுடன், அனைத்து ப்ளக் இன் புரோகிராம்களையும் கண்டறிந்து நீக்கிவிட்டேன். இருப்பினும் பிரவுசர் நன்றாகவே வேலை செய்கிறது. சமயத்தில் தந்த நல்ல அறிவுரைக்கு நன்றி.

அ.இரா.மதிவாணன், சேலம்.

இன்டர்நெட் டாட் ஓ.ஆர்.ஜி. மற்ற நாடுகளிலும் பயன்படுத்தப்படுவதாக எழுதி உள்ளீர்கள். பின் எப்படி, ரிலையன்ஸ் மட்டும் இங்கு இந்த சலுகைகளைத் தரும்? இந்த தளம், சேவை மற்றும் இயங்கும் விதம் குறித்து அனைத்து சந்தேகங்களும் தீரும் படி விளக்கவும். மற்ற மொபைல் சேவை நிறுவனங்கள் இதனால் பாதிக்கப்படாதா? பேஸ்புக்கிற்கு இதனால் வர்த்தக ரீதியாக என்ன லாபம்?

என். ராபர்ட் சாமுவேல், திருமங்கலம்.

பலமுறை அடுத்தவர்களின் கம்ப்யூட்டரில் கூகுள் வழி தேடல்களை மேற்கொள்கையில், நம் தேடல்கள் அடுத்தவர்களுக்குத் தெரிந்துவிடுமே என்று எண்ணுவதுண்டு. உங்கள் கட்டுரை அதற்கான தீர்வினைத் தந்தது. ஆனாலும், செட்டிங்ஸ் சென்று, செட் அப் மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. கூகுள் இதற்கு ஓர் எளிய வழியைத் தந்திருக்கலாம். நான் பெரும்பாலும், Incognito Window தான் பயன்படுத்துகிறேன்.

என். ஜெயலஷ்மி நரசிம்மன், கோவை.

மொபைல் போன்களிலும், கம்ப்யூட்டரிலும் ஒரே ஆப்பரேட்டிங் சிஸ்டத்தை இயக்குவதன் மூலம், ஆப்பரேட்டிங் சிஸ்டம் வகையில் தன் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொள்ள, தன் மொபைல் சிஸ்டத்திலும், மொபைல் போன்களிலும், நிச்சயம் பெரும் மாற்றங்களை மைக்ரோசாப்ட் முயற்சிக்கும். பார்சிலோனா கருத்தரங்கு இதனை நிச்சயம் உறுதி செய்திடும்.

சி. முருகராஜ், சென்னை.

மைக்ரோசாப்ட் தந்துள்ள புதிய ஆப்பரேட்டிங் சிஸ்டத்தை 20 லட்சத்திற்கும் மேலானோர் சோதனை செய்து வருகின்றனர் என்பது, கம்ப்யூட்டர் பயனாளர்கள், அந்நிறுவனத்தின் மீதுள்ள நல்ல நம்பிக்கையையே காட்டுகிறது. இந்த நிலையை மைக்ரோசாப்ட் என்றும் விட்டுக் கொடுக்காது.

டாக்டர் என். சுரேந்திரன். திருப்பூர்.

இணைய முகவரி குறித்த தங்களின் பதில் மிகத் தெளிவாகவும், கூடுதல் தகவல்கள் தருவதாகவும் அமைந்துள்ளது. பாராட்டுகள். நன்றி.

எஸ். புகழேந்தி, தாம்பரம்.

நிச்சயமாய் இணையம் என்பது, நம் வாழ்வின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக, எதற்கும், எந்த செயலுக்கும், ஓர் அடிப்படையை வழங்கும் கருவியாக மாறும். எரிக் ஸ்மித் சொல்வது எதிர்கால உண்மை.

கா. அன்புச் செல்வன், திருத்தங்கல்.

கேள்வி – பதில்

–டாக்டர் பெ. சந்திர போஸ்–

கேள்வி: அண்மையில் ஓர் ஆங்கில இதழில், விண்டோஸ் 10 இயக்கத் தொகுப்பு ஓராண்டுக்கு மட்டுமே இலவசம் என்றும், அதன் பின்னர், மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு மாதந்தோறும் சந்தா தொகை கட்டினால் மட்டுமே பயன்படுத்த முடியும் என்றும் இருந்தது. ஆனால், நீங்கள் எழுதிய கட்டுரையில் முற்றிலும் இலவசம் என்று உள்ளது. சற்று விளக்கவும்.

என். சந்திரா தேவி, மதுரை.

பதில்: விண்டோஸ் 7, விண் 8 மற்றும் 8.1 இயக்க முறைமையை தங்கள் கம்ப்யூட்டர்களில், சரியான உரிமங்களுடன், கட்டணம் செலுத்தி, பதிவு செய்து பயன்படுத்தி வருபவர்கள், விண்டோஸ் 10 தொகுப்பிற்கு அப்கிரேட் செய்து கொள்ளலாம். இவ்வாறு அப்கிரேட் செய்யப்பட்டு இயக்கப்படும் விண்டோஸ் 10, இறுதி வரை சிறப்பாகச் செயல்படும் என்று மைக்ரோசாப்ட் கூறியுள்ளது. ஆனால், ஓராண்டுக்குப் பின்னர் தாமதமாக, இதனை அப்கிரேட் செய்து இன்ஸ்டால் செய்பவர்கள், மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு அதற்கான கட்டணம் செலுத்த வேண்டும். இதற்கான காரணம், மைக்ரோசாப்ட் மக்களை ஓராண்டுக்குள் அப்கிரேட் செய்து, இந்த புதிய விண்டோஸ் 10 சிஸ்டத்திற்கு மாறுவதற்குத் தூண்டுகிறது. இதன் மூலம் ஒரே ஆப்பரேட்டிங் சிஸ்டம், அனைத்து விண்டோஸ் கம்ப்யூட்டர்களிலும் இருக்கும் என்று மைக்ரோசாப்ட் எதிர்பார்க்கிறது. இதன் மூலம், பிற்பாடு கண்டறியப்படும் பிழைக் குறியீடுகளுக்கு நிவர்த்தி செய்திடும் கோப்புகளை எளிதாகத் தயாரித்து வெளியிட முடியும் என மைக்ரோசாப்ட் திட்டமிருகிறது.

கேள்வி: கம்ப்யூட்டர் சார்ந்த இதழ் ஒன்றில் Ransomware என்ற தொழில் நுட்பச் சொல் குறித்துப் படித்தேன். பணம் பறிக்கும் வேலையை மேற்கொள்ளும் வைரஸ் போலத் தெரிந்தது. நான் சொல்வது சரியா? இதற்கான சரியான விளக்கமும் எடுத்துக் காட்டும் தரவும்.

என். சுந்தர ராஜன், மதுரை.

பதில்: Ransomware என்பது ஒரு வகை மால்வேர் புரோகிராம். இது உங்கள் கம்ப்யூட்டர் இயக்கத்தினை முடக்கி வைத்திடும். அதனை மீண்டும் செயல்படுத்த, குறிப்பிட்ட தொகைக்கான பணத்தை அவர்கள் சொல்லும் இடத்தில் செலுத்துமாறு அச்சுறுத்தப்படுவீர்கள். பணத்தைத் தர நீங்கள் தயார் ஆனாலும், சில வேளைகளில் அதனைப் பெறாமல், தொடர்ந்து கம்ப்யூட்டரை முடக்கும் செயலில் ஈடுபடுவார்கள். அல்லது பணத்தைப் பெற்றுக் கொண்டு, கம்ப்யூட்டரைத் தொடர்ந்து முடக்குவார்கள்.

இந்த ரேன்சம் வேர் புரோகிராமினை அனுப்பி, கம்ப்யூட்டரைக் கைப்பற்றுபவர்கள், சில வேளைகளில் அரசு துறை அலுவலர்கள் போலச் செயல்படுவார்கள். உங்கள் கம்ப்யூட்டரில் சட்ட விதிகளுக்குப் புறம்பாக சில சாப்ட்வேர் தொகுப்புகள் இயங்குவதாகவும் அல்லது சட்டத்திற்குப் புறம்பான செயல்பாடுகளுக்கான தகவல்கள் இருப்பதாகவும், இதனால் நீங்கள் சிறைப்பிடிக்கப்படுவீர்கள் என்றும் பயமுறுத்தல் வரும். சிறைப பிடிக்கப்படும் வாய்ப்பினைத் தவிர்க்க, குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டும் எனவும் அச்சுறுத்தல் கிடைக்கும். இந்தியாவில் இது போல அச்சுறுத்தல்கள் வந்துள்ளனவா என்று தகவல் இல்லை. அப்படியே, வந்திருந்தாலும், தாங்கள் ஏமாந்ததை யார் தான் வெளியே சொல்வார்கள்.

கேள்வி: எனக்கு இந்தப் பிரச்னை சில மாதங்களாகவே உள்ளது. தீர்வினைக் காண முடியவில்லை. தயவு செய்து உதவவும். இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 11ல், விண்டோ ஒன்றைத் திறக்கும் போது, அது முழுமையான முழுத் திரையாக இல்லை. சிறிய விண்டோவாகவே திறக்கிறது. பின்னர், முழுத் திரைக்கான ஐகானைக் கிளிக் செய்த பின்பு முழுத் திரை கிடைக்கிறது. ஆனால், இன்டர்நெட் எக்ஸ்புளோரரை விட்டு வெளியேறி பின் மீண்டும் வந்தால்,

மீண்டும் சிறிய அளவிலேயே திரை கிடைக்கிறது. இந்தப் பிரச்னை எந்த முறையில் பிரவுசரைத் திறந்தாலும் ஏற்படுகிறது. தீர்வும் விளக்கமும் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என். தனசேகரன், சிவகாசி.

பதில்: இன்டர்நெட் எக்ஸ்புளோரர், நீங்கள் அதனை இறுதியாக மூடும்போது என்ன விண்டோஸ் செட்டிங்ஸ் அமைத்திருந்தீர்களோ, அதனை நினைவில் கொண்டே அடுத்து திறக்கும்போது செயல்படும். ஆனால், சில வேளைகளில், நீங்கள் ஏதேனும் ஒரு லிங்க் மூலம் அதனைத் திறந்தால், அது சிறிய அளவிலான திரையுடன் திறக்கலாம். எனவே, உங்கள் கம்ப்யூட்டரில் ஏற்படும் இந்த பிரச்னை, பிரவுசரில் இல்லை. ஏதேனும் மால்வேர் அல்லது வைரஸ் உங்கள் கம்ப்யூட்டரில் அமர்ந்துகொண்டு இந்த பிரச்னையை ஏற்படுத்தலாம். (முழுத் திரை கிடைக்க ஐகானையெல்லாம் தேடாதீர்கள். எப் 11 கீயை அழுத்தலாமே!)

இருப்பினும், கீழ்க்காணும் வழிகளைக் கையாண்டு இதற்கான தீர்வுக்கு முயற்சிக்கலாம். பிரவுசரில் ஒரு விண்டோவினைத் திறக்கவும். அடுத்து, ஏதேனும் ஒரு லிங்க்கில், ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில் Open in New Window என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இப்போது புதிய விண்டோவில் தளம் திறக்கப்பட்ட பின்னர், முதல் விண்டோவினை மூடவும். இப்போது இருக்கும் விண்டோவின் மூலைகளில் கர்சரைக் கொண்டு சென்று, விண்டோவினைப் பெரிதாக்கவும். இங்கு, மேக்ஸிமைஸ் பட்டனைப் பயன்படுத்த வேண்டாம். இனி, மீண்டும் திறக்கும்போது, நீங்கள் செட் செய்த அளவிலேயே விண்டோ கிடைக்கும். என் கம்ப்யூட்டரில் இதனை மேற்கொள்கையில் கிடைத்தது.

இன்னொரு வழியும் மேற்கொள்ளலாம். பிரவுசரைத் திறக்கவும். விண்டோவினை முழுத் திரை அகலத்திற்கு இழுக்கவும். அடுத்து கண்ட்ரோல் அழுத்திக் கொண்டு File என்பதில் கிளிக் செய்திடவும். பைல் மெனு கிடைக்கவில்லை என்றால், கண்ட்ரோல் அழுத்தும் முன், ஆல்ட் கீயினை அழுத்தவும். பைல் மெனு கிடைக்கும். இவை உங்கள் பிரச்னையைத் தீர்க்கவில்லை என்றால், இன்டர்நெட் எக்ஸ்புளோரரை மீண்டும் செட் செய்திடவும். இவ்வாறு செய்திடுகையில், உங்கள் டூல் பார் மற்றும் செக்யூரிட்டி செட்டிங்ஸ் மாறிவிடும். மீண்டும் அவற்றை செட் செய்திட வேண்டும். இதிலும் சரியாகவில்லை என்றால், கம்ப்யூட்டரில் உள்ள மால்வேர் அல்லது வைரஸ் புரோகிராமினை நீக்கும் வழிகளை மேற்கொள்ளவும்.

கேள்வி: என் கம்ப்யூட்டரில் புரோகிராம் ஒன்று திறக்கப்படும் விதத்தினை எப்படி மாற்றுவது? ஏற்கனவே ஒரு புரோகிராம் மூலம் திறக்கப்படும் ஒரு புரோகிராமினை, இன்னொரு புரோகிராம் கொண்டு திறக்கும்படி அமைக்க என்ன செட்டிங்ஸ் அமைக்க வேண்டும்?

கா. செந்தில் வேலன், இராமநாதபுரம்.

பதில்: செந்தில், நீங்கள் பைல் என்று சொல்வதற்குப் பதிலாக புரோகிராம் என எழுதி இருக்கிறீர்கள். பைல் ஒன்றைத் திறந்து உங்கள் பயன்பாட்டுக்குக் காட்டுவதே ஒரு புரோகிராம். எடுத்துக் காட்டாக, டாகுமெண்ட் ஒன்றை வேர்ட், நோட்பேட் அல்லது வேர்ட் பேட் என எந்த புரோகிராமும் திறக்கலாம். வழக்கமாக வேர்ட் புரோகிராம் தான் இதனைத் திறக்கும்.

இனி, உங்கள் பிரச்னைக்கு வருவோம். பைல் ஒன்றைத் திறக்கும் வழக்கமான புரோகிராமிற்குப் பதிலாக, நீங்கள் விரும்பும் புரோகிராம் மூலம் திறக்க விரும்புகிறீர்கள். இதற்கு இரண்டு வழிகள் உள்ளன. பைல் பெயர் மீது ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில் Open With என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். அந்த பைலைத் திறந்து இயக்கக் கூடிய புரோகிராம்களின் பட்டியல் காட்டப்படும். அதிலிருந்து நீங்கள் பயன்படுத்த விரும்பும் புரோகிராமினைத் தேர்ந்தெடுக்கலாம். அந்த வகை பைலை, எப்போதும் ஒரு குறிப்பிட்ட புரோகிராம் தான் திறக்க வேண்டும் என விரும்பினால், அதே Open With மெனுவில், Choose default programs என்பதில், நீங்கள் விரும்பும் புரோகிராமினைத் தேர்ந்தெடுத்து அமைத்துவிட்டால், அடுத்து மாற்றப்படும் வரையில், அதே புரோகிராம் தான், அந்த வகை பைலைத் திறக்கும்.

கேள்வி: மிகச் சிறப்பாக இயங்கி வரும் இந்திய ரயில்வே இணைய தளத்தில், குறிப்பிட்ட ட்ரெயின் தாமதமாக வருகிறதா? எந்த ஸ்டேஷனில் உள்ளது? போன்ற விபரங்களை அறிந்து கொள்ள முடியுமா? அதற்கான இணைய முகவரி என்ன?

செ. முத்துக் கருப்பன், மதுரை.

பதில்: நீங்களே மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது என்று சான்று அளித்துவிட்டீர்கள். அதிக மக்களால் பயன்படுத்தப்படும் தளமாகவும் இந்திய ரயில்வேயின் ஐ.ஆர்.சி.டி.சி. தளம் உள்ளது. நீங்கள் சரியான நேரத்தில் தான் இந்தக் கேள்வியைக் கேட்டுள்ளீர்கள். அண்மையில் தான் இந்த வசதி தரப்பட்டுள்ளது. http://enquiry.indianrail.gov.in/ntes/ என்ற இணைய தளம் செல்லவும். நீங்கள் அறிய விரும்பும் ட்ரெய்ன் பெயர் அல்லது எண் தரவும். எந்த நாள் என்று குறிக்கவும். தொடங்கும் ஸ்டேஷன் பெயர், புறப்பட்ட நேரம், தற்போது எந்த ஸ்டேஷனைக் கடந்துள்ளது, எந்த நேரத்தில் இறுதி ஸ்டேஷனை அடையும் என்ற தகவல்கள் காட்டப்படும். ட்ரெய்ன் அப்போது எந்த நிலையத்தில் உள்ளது, எந்த ஸ்டேஷனில் இருந்து அதற்கு முன் புறப்பட்டது, நீங்கள் கேள்வி கேட்ட ஸ்டேஷன், தகவல் பெற்ற நேரத்தில்

எந்த ஸ்டேஷனில் இருந்தது எதிர்பார்க்கும் நிலையம் வரும் நேரம், அந்த ஸ்டேஷனில் இருந்து புறப்படும் நேரம் என்ற வரிசையில் அனைத்து தகவல்களும் தரப்படும்.

இந்த கேள்விக்கான பதிலை இன்னொரு நாட்டில் இருந்து எழுதுகையில், அன்று மதுரையிலிருந்து புறப்பட்ட வைகை எக்ஸ்பிரஸ் குறித்த தகவலைக் காட்டும் இணைய தளத்தின் பதிலைப் படமாக இங்கு தந்துள்ளேன். இதுதான் தகவல் தொழில் நுட்பம் நமக்குத் தரும் வசதி. இதுவே தொலைபேசி மூலம் அறிய முற்பட்டால், எதிர் முனையில் பேசுபவர்களுக்கு, தெளிவாகப் புரிய வைத்து, பின் அவர்கள் தகவல் தேடி நமக்குத் தெரிய வைப்பது நேரம் எடுக்கும் வேலையாக அமையும்.

கேள்வி: என் அலுவலக டாகுமெண்ட்களில், பல டேபிள்களை உருவாக்க வேண்டியுள்ளது. சில வேளைகளில், இரண்டு டேபிள்களை இணைத்து ஸ்டேட்மெண்ட் அனுப்ப வேண்டியதுள்ளது. அவ்வாறு இணைக்கும்போது, செல்களின் அகலம், நீளம் ஒன்று போல இல்லை எனில் பிரச்னை ஏற்படுகிறது. இதற்கு ஏதேனும் எளிய வழி உள்ளதா?

என். ஜெயந்தி, கும்பகோணம்.

பதில்: எம்.எஸ். ஆபீஸ் அல்லது வேர்ட் எந்த தொகுப்பினைப் பயன்படுத்துகிறீர்கள் என்ற தகவல் தந்திருக்கலாம். உங்கள் கேள்வியிலிருந்து, வேர்ட் 2007 நீங்கள் பயன்படுத்துகிறீர்கள் என்று நினைக்கிறேன். உங்களின் பிரச்னைக்கான தீர்வினை வேர்ட் கொண்டுள்ளது. இதோ, விரிவாக அதனைத் தருகிறேன்.

நீங்கள் குறிப்பிட்டது போல, இரண்டு டேபிள்களிலும் உள்ள நெட்டு வரிசை எண்ணிக்கை வேறுபாட்டுடன் இருந்தால், இணைப்பது சற்று சிரமத்தைத் தரும். இருப்பினும் தீர்வு காணலாம். கீழ்க்கண்டபடி செயல்படவும்.

1. புதிதாக இணைக்கப்பட்ட டேபிளில் ஏதேனும் ஓர் இடத்தில் கர்சரைக் கொண்டு சென்று நிறுத்தவும்.
2. ரிப்பனில் Layout டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் Select | Select Table எனச் செல்லவும். இப்போது முழு டேபிளும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும். இங்கு Cell Size குரூப்பில் தரப்பட்டுள்ள கண்ட்ரோல்களைப் பார்க்கவும். உயரம் மற்றும் அகலம் அமைப்பதற்கான கண்ட்ரோல்கள் தரப்பட்டுள்ளதனைக் காணலாம். உங்களுக்கு இப்போதைக்கு அகலத்தைச் சரி செய்வதுதான் வேலை. கண்ட்ரோலின் வலது புறம் உள்ள மேல் நோக்கிய அம்புக் குறியினைக் கிளிக் செய்திடவும். இப்போது வேர்ட், நெட்டு வரிசையின் அகலத்தைச் சற்றுக் குறைப்பதனைக் காணலாம். இருப்பினும் அனைத்து நெட்டு வரிசையின் அகலமும் ஒரே அளவில் அமைந்திருப்பதனைப் பார்க்கலாம்.

இப்போது முழு டேபிளுக்கும் நெட்டு வரிசை ஒரே அகலத்தில் அமைந்திருப்பதனைக் காணலாம். இனி Cell Size குரூப்பில் AutoFit என்னும் டூலினைக் கிளிக் செய்திடவும். வேர்ட் இப்போது துணை மெனு ஒன்றைக் காட்டும். அதிலிருந்து AutoFit Window என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இப்போது டேபிளின் மொத்த அகலமும், கிடைக்கின்ற மார்ஜின் அகலம் மற்றும் நெட்டு வரிசை அனைத்திற்கும் ஒரே அளவில் அகலம் அமைக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். இந்த நேரத்தில், நீங்கள் கூடுதலாக மாற்றங்கள் ஏதேனும் ஏற்படுத்த விரும்பினால், ஏற்படுத்திக் கொள்ளலாம்.

கேள்வி: பிரவுசர் திறந்து இணைய தளம் ஒன்றின் முகவரி கொடுத்துச் செல்லாமல், டெஸ்க்டாப்பில் ஷார்ட் கட் ஐகான் வைத்து அதில் கிளிக் செய்வதன் மூலம், நேரடியாக அந்த இணைய தளத்தினைப் பயன்படுத்தலாமா?

சா. இனிய நிலா, புதுச்சேரி.

பதில்: சில வழிமுறைகளை மேற்கொண்டால், இணைய தளம் ஒன்றுக்கு நீங்கள் விரும்பும் வகையில் ஷார்ட் கட் ஐகான் ஏற்படுத்தி, அதில் கிளிக் செய்து தளம் செல்லலாம். முதலில் உங்கள் பிரவுசரைத் திறந்து, நீங்கள் விரும்பும் தளத்திற்குச் சென்று திறக்கவும். அதனை, கம்ப்யூட்டரின் டெஸ்க்டாப் தெரியும் வகையில், சிறியதாக விண்டோவினை அமைக்கவும். இப்போது பிரவுசரின் முகவரி கட்டத்தினைப் பார்க்கவும். கட்டத்தினை அடுத்து ஒரு சிறிய ஐகான் தரப்பட்டிருக்கும்.

இது சில பிரவுசரில் வேறுபடவாய்ப்புண்டு. அந்த ஐகானில் கிளீக் செய்து, அப்படியே இழுத்து வந்து, டெஸ்க்டாப்பில் விட்டுவிடவும். தானாக, அந்த இணைய தளத்திற்கு ஒரு ஷார்ட் கட் ஐகான் அமைக்கப்பட்டு காட்சியளிக்கும்.

இனி, அடுத்து, நீங்கள் இணைய தளம் செல்ல வேண்டும் என்று எண்ணுகையில், அதில் கிளிக் செய்தால் போதும். எந்த பிரவுசரை மாறா நிலையில் உள்ள பிரவுசராக அமைத்திருக்கிறீர்களோ, அது திறக்கப்பட்டு, அந்த இணைய தளம் காட்சி அளிக்கும்.

கேள்வி–பதில்